


**04. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

1. தேச கட்டமைப்பில் திறன் மேம்பாடு முக்கிய அங்கம் வகிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மகளிர் நலன் மற்றும் சுகாதாரத்திற்கான ஆரோக்கிய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆறரை கோடிக்கும் அதிகமான மகளிர் பயனடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

3. கூட்ட நெரிசல் விபத்துகளை தடுக்க முழுமையான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வடிவமைக்கப்படும் என முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

5. அஹமதாபாத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 1 இன்னிங்ஸ் 140 ரன் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸை வென்றது

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

தேச கட்டமைப்பில் திறன் மேம்பாடு முக்கிய அங்கம் வகிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதிலும் 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கல்வி, திறன்மேம்பாடு, தொழில் முனைவோர் சார்ந்த இளையோர் நலத்திட்டங்களை புதுதில்லியில் இன்று துவக்கி வைத்து பேசிய பிரதமர், படைப்பாற்றல் சக்தியை முன்னெடுத்துச் செல்ல அரசு இளையோரை தயாரித்து வருவதாக குறிப்பிட்டார்.

இந்திய தொழில்நுட்ப மையங்கள் சுயசார்பு பாரதத்தின் பணி பட்டறைகளாக திகழ்கின்றன என்று கூறியஅவர், PM சேது திட்டம் நாட்டிலுள்ள இளையோரை உலகின் திறன் தேவைகளுடன் இணைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாட்டிலுள்ள அனைத்து தொழில்மையங்களும் தரம் உயர்த்தப்பட்டு நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்படும் என்றார்.

அறிவுசார் கட்டமைப்பும், திறன் ஆற்றலும் நம்தேசத்தின் மிகப்பெரிய சக்தியாகும் என்று பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

கல்வி முன்னேற்றத்திற்காக வாழ்வை அர்ப்பணித்த பாரத் ரத்னா கர்பூரி தாகூரின் சேவைகளை நினைவுகூர்ந்த பிரதமர், அவரது பெயரில் நிறுவப்பட்டுள்ள திறன்மேம்பாடு பல்கலைக்கழகம், படைப்பாற்றல் திறனை முன்னெடுத்து செல்லும் ஆற்றல்மிகு கருவியாக செயல்படும் என்றார்.

இந்நிகழ்வில் 200 தொழில் திறன் ஆய்வகங்களை துவக்கி வைத்ததுடன் 400 நவோதயா மற்றும் 200 ஏகலைவா மாதிரி பள்ளிகளையும் பிரதமர் இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

ஷியாமாஜி கிருஷ்ணவர்மா

சுதந்திர போராட்ட வீரர் ஷியாமாஜி கிருஷ்ணவர்மாவின் 168-வது பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திரமோடி அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அன்னாரின் வீர தீர அர்ப்பணிப்பு, தன்னலமற்ற சேவை நாட்டின் விடுதலை போராட்ட இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்ததாக பிரதமர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

நாடுமுழுவதும் மகளிர் நலன் மற்றும் சுகாதாரத்திற்கான ஆரோக்கிய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதுவரை 18 லட்சத்திற்கும் அதிகமான முகாம்கள் நடத்தப்பட்டு, ஆறரை கோடிக்கும் அதிகமான மகளிர் பயனடைந்துள்ளதாக மத்திய சுகாதார குடும்பநலத் துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான குடும்பத்திற்கு அடித்தளமாக விளங்கும் மகளிர் நலனுக்கான மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அதிகரித்து வருவதாக அமைச்சர் தமது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முறையான மருத்துவ பரிசோதனைகள் மூலம் தங்கள் ஆரோக்கியத்தை முன்னிறுத்தி ஆளுமை மிக்க எதிர்காலத்தை மகளிர் உறுதிசெய்வதன் அவசியத்தையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

சுகாதார அமைச்சகம்

இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சளி இருமல் மருந்துகளை பரிந்துரைக்கக்கூடாது என மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, இருமல் தொந்தரவுகளை உரிய மருத்துவ ஆலோசனையின் கீழ் கண்காணிப்பதன் அவசியத்தை அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் மத்திய பிரதேச மாநிலத்தில் இருமல் மருந்து உட்கொண்ட 10-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்த நிலையில் இதுதொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

சரக்கு சேவை வரி

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் தோல் பொருட்கள் மற்றும் காலணிகளுக்கான வரி குறைப்பு பெருமளவில் பயனளிப்பதாக வேலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் கூட்ட நெரிசல் விபத்துகளை தவிர்ப்பதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வடிவமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கரூர் கூட்டநெரிசல் உயிரிழப்பு குறித்து தமது சமூக வலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ள முதலமைச்சர் உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு ஏற்ப இச்சம்பவம் குறித்து சிறப்பு புலனாய்வு குழு தனது விசாரணையை தொடங்கும் என்றார்.

முழு உண்மையும் வெளிகொணரப்படும் என்றும் முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

தமிழகத்தில் இத்தகைய துயரம் இனி ஏற்படாத வகையில் அனைவரும் ஒருங்கிணைவதன் அவசியத்தையும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**துரைமுருகன்**

தமிழகத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், நீர்நிலைகளை தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளின் மூலம் அதிக அளவிலான மழைப்பொழிவையும் எதிர்கொள்ளும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக சேர்காட்டில் நலம்காக்கும் மருத்துவ முகாமை பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

**அமைச்சர்கள்**

திருச்சி சோமரசம் பேட்டையில் 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசின் சித்த மருத்துவமனை கட்டுமான பணிகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.**K.N.**நேரு இன்று தொடங்கிவைத்தார்.

திருச்சி பொன்னி ஆறு ஆணையை மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி இன்று நேரில் ஆய்வு செய்தார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் மனநல அவசர சிகிச்சை மையத்தை மாநில தொழில்துறை அமைச்சர் திரு.**TRB** ராஜா இன்று தொடங்கிவைத்தார்

❖❖❖❖❖❖

தாயுமானவர் திட்டம்

தமிழகத்தில் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கே சென்று அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் பணிகள் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறுகிறது.

மாதத்தோறும் இரண்டாவது சனி ஞாயிற்று கிழமைகளில் இப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இம்மாதம் முன்கூட்டியே இப்பொருட்கள் வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

காஞ்சிபுரம், பெரம்பலூர், நாமக்கல், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖

## திருப்பூர் குமரன்

சுதந்திர போராட்ட வீரர் திருப்பூர் குமரனின் 122-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் கொடிகாத்த குமரனின் தன்னலமற்ற தியாகமும் தேசப்பற்றும் வருங்கால தலைமுறையினருக்கு உத்வேகமாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரின் பிறந்த ஊரான சென்னிமலையில் உள்ள அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாத செலுத்திய மாநில செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், இரண்டரை கோடி ரூபாய் மதிப்பில் திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்ற திருப்பூர் குமரன் காவலர்களால் தாக்கப்பட்டபோதும் தேசிய கொடியை கையில் ஏந்தியவாறே உயிர்நீத்ததையடுத்து கொடிகாத்த குமரன் என அழைப்படுகிறார்.

❖❖❖❖❖❖

## சுப்ரமணியசிவா

விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்ரமணியசிவாவின் 142-வது பிறந்தநாளை ஒட்டி தர்மபுரி மாவட்டம் பாப்பாரபட்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்

திரு. சதீஷ் மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖

நெல்லை வாய்ஸ்

நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கனமழையால் வாழை மற்றும் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கொடைக்கானல் வாய்ஸ்

தொடர் விடுமுறையை ஒட்டி கொடைக்கானலுக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கான குறைதீர்நாள் கூட்டம் வரும் புதன்கிழமை மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களில் காலியாகவுள்ள உதவியாளர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு வரும் 11-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் நாளைமுதல் தேர்வுக்கூட அனுமதி சீட்டுகள் வழங்கப்படவுள்ளன.

சேலம் மண்டல தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையத்தின் சார்பில் தூய்மையே சேவை விழிப்புணர்வு பேரணி சேலத்தில் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

அஹமதாபாத்தில் வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ் 140 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

3-ம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 448 ரன் எடுத்திருந்த போது ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடிய வெஸ்ட்இண்டிஸ் 146 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

வெண்ட் இண்டீஸ் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 162

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖